சார்பு நீதிமன்றம், இலால்குடி.

நாள். 09.08.2023

SC.NO. 137/2023

PW 5 : திரு.சேவியர் (வயது 42 ) த/பெ. பிலவேந்திரன்

( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

( எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் முள்ளால் கிராமத்தில் காளியம்மன் கோவில் தெருவில் குடியிருக்கிறேன். நான் விவசாய கூலி வேலை செய்கிறேன் . அ.சா.1 முதல் 4 வரை உள்ளவர்களை தெரியும் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் . ஆஜர் எதிரியை தெரியும் அவர் எங்கள் ஊரை சேர்ந்தவர் தான் . ஊருக்கு வந்த கார்த்திக் என்பவரை 15.06.2022 ம் தேதி இரவு 9 மணியளவில் ஆஜர் எதிரி கத்தியால் குத்திவிட்டதாக கேள்விப்பட்டேன் . மறு நாள் 16.06.2022 ம் தேதி காலையில் 8.30, 9 மணியளவில் முள்ளால் பஸ் ஸ்டாப்பிற்கு நான் போயிருந்தேன் . அங்கு எங்கள் ஊரை சேர்ந்த கலியமூர்த்தி மகன் செல்வராஜ் வந்திருந்தார் . அப்போது கல்லக்குடியா இலால்குடியா என்று தெரியவில்லை . பெண் காவல் ஆய்வாளர் அந்த இடத்திற்கு வந்திருந்தார் . சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள். அதில் கையொப்பம் கேட்டார்கள் . அந்த மகஜரில் நானும், செல்வராஜீம் கையெழுத்து போட்டோம் . என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடையது . அந்த சாட்சி

கையெழுத்து அ.த.சா.ஆ.2 / அ.சா.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று நான் படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான் . போலிசார் வரைபடம் வரையும் போது உடன் இருந்தேன். பஸ் ஸ்டாப்பிற்கு அருகில் மலர்கொடி என்பவர் வீடு உள்ளது. அவரது வீடு பஸ் ஸ்டாப்புக்கு தென்புறம் உள்ளது. முள்ளால் கிராமம் கல்லக்குடி காவல் நிலைய கட்டுப்பாட்டிற்குள் உள்ளது. நான் பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்யும் போது நான் அங்கு இல்லை என்றாலும் பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல . போலிசார் என்னை விசாரிக்கும் போது காலை 9 மணி இருக்கும். சம்பவ சாட்சிகள் யாரும் அங்கு இல்லை என்றால் சரிதான். மற்றொரு சாட்சி செல்வராஜ் இருந்தார்.

/signed/
சேவியர்

/signed/
திரு.S.விஜயகுமார், M.A., M.L.,
சார்பு நீதிபதி, இலால்குடி.